1983 சனவரி 28]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இவைகளையெல்லாம் மனதில் வைத்துத்தான் நன்றாகப் பரிசீலனை செய்த பிறகு எந்த வகையில் எதெதற்கு பயன்படுத்தலாம் என்பதை இந்த அரசு முடிவு எடுக்கவிருக்கிறது.

திரு உ. சுப்பிரமணியன் : குடிநீருக்காகச் செய்யப்பட்ட குழாய்களை நாற்றம் எடுக்கும் கூவம் தண்ணீரில் மறைமுகமாக பூமிக்கடியில் உள்ள கழிவுநீரை வெளிப்படுத்த அவற்றை உபயோகப்படுத்த சாத்தியமிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை.)

திரு.குமரி அனந்தன் : பேரவை துணைத் தலைவர் அவர்களே' வீராணம் திட்டத்திற்காகத் தயாரிக்கப்பட்ட இந்தக் குழாய்கள் சில செங்கல்பட்டும் சென்னையும் சேருகிற இடத்திலிருந்து ஐ.ஐ.டி. வரை புதைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழாய்கள்வழி பழனத்தம் ஏரியிலிருந்து தென் சென்னைக்கு தண்ணீர் கொண்டு வர பயன்படுத்த முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், 4500 கால்வாய்களில் புதைக்கப்பட்டிருக்கின்றன. எதற்காகப் புதைக்கப்பட்டது என்பது உங்களுக்குத் தெரியும். எதற்காகப்புதைக்கப்பட்டதோ அதற்காக அதை உபயோகப்படுத்த முடியாது என்று நிருபணமாகிவிட்டது. எனவே மாற்றுத் திட்டங்கள் எதற்காகவாவது எந்த வகையில் உபயோகப்படுத்த முடியும்—எக்கணாமிக்கலி யூஸ் செய்வதற்காக என்பதை பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். அதைத்தான், திரு அம்பிகாபதி அவர்கள் நல்ல கேள்வியாகக் கேட்டார்கள். அதற்குள்ள நல்ல பதிலையும் நான் சொல்லியிருக்கிறேன்.

திரு. மு, அம்பிகாபதி: தற்சமயம் அந்தக் குழாய்களிலே பல பேர்கள் குடும்பம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அது சொந்தமாக்கப்படுமா?

(விடை இல்லை.)

தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் பெருந்தலைவர் காமராஜர் நினைவகம் எழுப்பும் திட்டம்,

*வினா எண். 31—திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1983 சனவரி 28

(அ) தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் பெருந் தலைவர் காமராஜர் நினைவகம் எழுப்புவதற்கு அரசு தடை விதித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் தடையை நீக்கி அதற்கு அனுமதி அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ)மற்றும்(ஆ)சென்னை நகரில் பல்வேறு உபயோகங்களுக்கென கட்டப்படும் பலமாடிக் கட்டிடங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான விதிமுறைகளை அரசு மறு ஆய்வு செய்து வருகிறது. இது குறித்து அரசு பொதுப் படையான கொள்கை முடிவு எடுத்து உரிய ஆணைகள் பிறப்பித்தவுடன் பலமாடிக்கட்டிடமாக எழுப்பப்படவுள்ள மறைந்த பெரியவர் திரு. காமராஜர் அவர்களின் நினைவகத் திற்கு அனுமதி வழங்குவது பற்றியும் பரிசீலனை செய்யப்படும்.

திரு. ப. நெடுமாறன்; அமைச்சரவர்களின் அறிவிப்புக்கு நன்றி. அதற்கு முன்னதாக பெரும் தலைவர் காமராஜ் அவர்களின் நினைவுச்சின்னத்திற்கு மட்டும் விசேஷ விதிவிலக்கு கொடுத்து உடனடியாக அனுமதி வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: There is a temporary ban for the construction of multi-storeyed buildings அடுக்குமாடிக் கட்டடம் கட்ட ஒரு 'டெம்பரரி பான்' போட்டிருக்கிறோம். அந்த விதிகளையெல்லாம் காபினட், அமைச்சரவை பரிசீலனை செய்து முடிவெடுப்பதாக இருக் கிறோம். அதற்குள்ளாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவசரப்பட்டு செய்யவேண்டுமென்று கேட்கிறார்கள். As a Special case ஆக இதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று மனு வருமானல் அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்வதற்கு கவனிக்கும்

(முற்பகல் 9-30)

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலிலே பலமாடிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு தற்காலிகமாக ஒரு தடை இருப்பதாகச் சொன்னதாக நான் அறிகிறேன், சென்னையிலே பல்வேறு இடங்களைப் பார்க்கின்ற போது, பல மாடிக் கட்டிடங்கள் திடீர்திடீரென்று முளைத்துக் கொண்டுவருகின்றன. ஒரே ஒரு காரணம், கடற் காற்று வீசுவது தடுக்கப்படுகிறது என்றால் அந்தத் தடை இருந்தால் நியாயம். ஆனால் மறைந்த பெருந் தலைவர் காமராஜ் அவர்களின் நினைவாகக் தேனாம் பேட்டையில் கட்டப்படும் கட்டிடத்திற்கு இந்தத் தடை எந்த வகையில் பொருந்தும் என்று தெரியவில்லை. ஆகவே, அதை

TRUTH ALONE TRIUMPHS

விரைவாக எழுப்புவதற்குத் துணையாக விசேஷ அனுமதியை அரசே முனைந்து செய்து முயற்சி எடுக்குமா? அமைச்சர் அவர்களின் பரிசீலிக்கப்படும் என்ற பதிலை நான் எதிர்பார்க்க வில்லை. முனைந்து அரசு முயற்சி எடுக்குமா என்பதை நான் எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 15 மீட்டர்களுக்கு மேலே உயரமாகக் கட்டுவதற்குத் தான் இந்தத் தடை என்று நான் சொன்னது. நீங்கள் திடீரென்று அனுமதியே பெறாமல் பெரியவர் காமராஜர் அவர்கள் நினைவாலயத்தைக் கட்டினால், அதனால் உங்களுக்கு கெட்ட பெயர் வரக்கூடாது. அதை மனதிலே வைத்துத்தான், சிறப்பாக எல்லோரும் போய்ப் பார்த்து மரியாதை செலுத்தும் இடமாக இருக்கின்ற காரணத்தினால், தனியாக நீங்கள் as a special case, pending finalisation of the scheme and other things by the Government. அப்படிப்பட்ட ஒரு மனு கொடுக்கப்படுமானால் உண்மையாகவே அது சிரியசாக பரிசீலனை செய்யப்படும்.

நிதிவசதி குறைவான நகரபஞ்சாயத்துக்களின் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க திட்டம்.

*வினா எண் 32— திரு. மு. ஜான் வின்சென்ட்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நிதிவசதி குறைவான நகர பஞ்சாயத்துக்களின் குடிநீர் பிரச்சினையைப் போக்க அரசிடம் மாற்றுத் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: ஆம்.

திரு. மு. ஜான் வின்சென்ட்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில நகர பஞ்சாயத்துக்களில் ஏராளமான கிராமங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதால், அந்தக் கிராமங்களுக்கு பக்கத்தில் இருக்கின்ற இடங்களில் இதுவரையில் தண்ணீர் கொடுப்பதற்கு குடிநீர் வடிகால் வாரியம் முன்வரவில்லை. ஆக, இந்த ஆண்டு தண்ணீர் கிடைக்காத நகர பஞ்சாயத்து கிராம மக்களுக்கு உடனடியாக தண்ணீர் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே கேள்வி அதுவல்ல. நிதிவசதி குறைவாக இருக்கக்கூடிய நகர பஞ்சாயத்துக்களில் குடிநீர் பிரச்சனையைப் போக்க அரசிடம் மாற்றுத் திட்டம் இருக்கிறதா என்று கேட்டுவிட்டு, அடுத்த கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். இருந்தாலும் ஒரு தகவல் தருகிறேன்.